**செய்தி வெளியீடு எண்: 51** **நாள்: 07.12.2024**

# <u>திரு. ஆர். என். ரவி, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் முப்படையினர் கொடி நாள் செய்தி - 2024</u>

தமிழ்நாட்டின் பிரியமான சகோதர சகோதரிகளே, வணக்கம்.

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் 7ஆம் தேதியன்று, முப்படையினர் கொடி நாளை நாம் கடைப்பிடிக்கிறோம். இந்த நாளன்று நமது முப்படையினரின் தளர்வில்லாத துணிச்சல், தியாகம், தேசபக்தி ஆகியவற்றுக்கு நாம் பாராட்டுக்களை செலுத்துகிறோம். இவர்கள் தாம் நமது தேசத்தின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையின் உறுதியான தூண்களாக இருக்கின்றார்கள்.

1949ஆம் ஆண்டு இந்த நாள் தொடங்கப்பட்ட காலந்தொட்டே, நமது தாய்த்திருநாட்டின் சேவையில் தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த, சீருடையணிந்த நமது ஆடவர்-பெண்டிருக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் ஆதரவளிப்பதோடு, அவர்களை கௌரவப்படுத்துவதில் நமக்கிருக்கும் ஒட்டுமொத்த பொறுப்பையும் படைவீரர்கள் கொடிநாள் நினைவூட்டுகிறது.

நமது எல்லைப்புறங்களைப் பாதுகாப்பதிலும், அவசரகாலங்களில் துரித செயல்பாட்டிலும், உலகம் நெடுக அமைதிகாக்கும் பணிகளுக்கு பங்களிப்பு அளிப்பதிலும் அசாதாரணமான தைரியத்தையும், வளைந்துகொடுக்கும் தன்மையையும் இந்தியாவின் படையினர் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். இறுதியான தியாகத்தைப் புரியத் தயார்நிலையும், கடமையின்பால் அவர்களுக்கு இருக்கும் அர்ப்பணிப்பு உணர்வும் நமக்கு உத்வேகம் அளித்து வருகின்றன.

இந்த நாளன்று, நாம் நமது நெஞ்சுரம்மிக்க படைவீரர்களை நினைவுகூர வேண்டும். அவர்கள் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்கிறார்கள், பிரிவுத்துயரத்தை நயத்தோடும், மிக்க பொறுமையோடும் சகித்துக் கொள்கிறார்கள். நமது தேசத்தின் சேவையில் அவர்களுடைய தியாகங்கள் சற்றும் குறைந்ததல்ல.

சீருடைப் படைவீரர்களின் நலனுக்கு உச்சபட்ச முதன்மையை இந்திய அரசு அளிக்கிறது. கடினமான இடங்களில் பணியாற்றும் இராணுவத்தினரோடு நமது மதிப்பிற்குரிய பிரதமரும், மதிப்பிற்குரிய பாதுகாப்பு அமைச்சரும் முக்கியமான பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். முன்னாள் படையினரின் நலன்களை முன்னிட்டு அரசுப் பணியிடங்களிலும், கல்விநிறுவனங்களிலும் ஒதுக்கீடு, உயிர்த்தியாகம் புரிந்த படையினரின் நெருங்கிய உறவினருக்கு பரிவுத்தொகை அளிப்பு, பயணச் சலுகைகள், எரிவாயு மற்றும் எரிபொருள் ஏஜென்சிக்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை, பிரதம மந்திரி கல்வி ஊக்கத்தொகைத் திட்டம், பாதுகாப்பு அமைச்சர் முன்னாள் படையினர் நலவாரிய நிதி, புனரமைப்புப் பயிற்சி, படையினர் ஓய்வு இல்லங்கள் போன்ற பல்வேறு நலத்திட்டங்களை இந்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசின் அண்மைக்கால நலத்திட்ட முன்னெடுப்புகளை வரிசைப்படுத்தினோம் என்றால்,

- ஹவல்தார் ரேங்க்குக்கு மேற்பட்ட முன்னாள் படையினரைப் பறிகொடுத்த மனைவியர்க்கு தொழில்கல்விப் பயிற்சிக் கொடை ₹20,000 ரூபாயிலிருந்து ₹50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.
- ஓய்வூதியம் பெறாத முன்னாள் படையினர் மற்றும் கணவனை இழந்த முன்னாள் படையினரின் மனைவிமாருக்கு மருத்துவக் கொடை ₹30,000 ரூபாயிலிருந்து ₹50,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.
- அனைத்து நிலைகளைச் சேர்ந்த, ஓய்வூதியம் பெறாத முன்னாள் படையினருக்கும், அவர்களை இழந்த அவர்களின் மனைவியருக்கும் அளிக்கப்படும் தீவிர நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைக் கொடை, ₹1.25 இலட்சம் ரூபாயிலிருந்து ₹1.50 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.
- முன்னாள் இராணுவத்தினருக்கான பங்களிப்பு உடல்நலத்திட்டத்தின் பல்நோக்கு சிகிச்சையகங்களில், 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஈ-சீஹாட் தொலைபேசி வழி மருத்துவ ஆலோசனைத் திட்டம் நாடெங்கிலும் 12 இடங்களில் முன்னோடியாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. வீட்டில் இருந்தபடியே உடல்நலத்திற்கான அணுகலை மேம்படுத்தும் வகையில்

முன்னாள் இராணுவத்தினரின் பங்களிப்பு உடல்நலத் திட்டத் தரவுகளை ஒருங்கிணைத்து மருத்துவ ஆலோசனைகளையும், மின்னணு மருத்துவப் பரிந்துரைகளையும் காணொளி வழியாக இந்த வசதி அளிக்கிறது.

- மூத்த முன்னாள் இராணுவத்தினர் மற்றும் உயிர்த்தியாகிகளின் குடும்பத்தாரின் குறைதீர்ப்பு மையங்களை **நமன் திட்டம்** அமைத்துக் கொடுக்கிறது. இந்த மையங்கள் அரசு அளிக்கும் வாடிக்கையாளர் சேவைகளை அமைத்துக் கொடுப்பதோடு, ஸ்பர்ஷ் தளம் வாயிலாக ஒய்வூதிய புதுப்பித்தல்களில் துணைபுரிகிறது. தில்லி இராணுவ முகாமில் இதன் முதல் மையம் நிறுவப்பட இருப்பதோடு, இந்தியா நெடுக மேலும் 13 மையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

இவற்றைத் தவிர, முப்படையினர் கொடிநாள் நிதிக்குப் பொதுமக்கள் பங்களிப்பு அளிப்பதை ஊக்கப்படுத்தும் வகையில், தீவிரமான விழிப்புணர்வு இயக்கங்களை சமூக ஊடகங்களில் பாதுகாப்பு அமைச்சகம் ஊக்கப்படுத்தி வருகிறது. மேலும், தனிநபர்களும் நிறுவனங்களும் கொடையளிக்க வசதியாக இணையவழி கொடையளிப்பு முறைகளையும் நிறுவியிருக்கிறது.

நிதி, மருத்துவ மற்றும் நிர்வாகரீதியான ஆதரவு வாயிலாக, முன்னாள் படையினர் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில் அரசின் அர்ப்பணிப்பு, இந்த முன்னெடுப்புகள் வாயிலாக பிரதிபலிக்கின்றன.

எப்போதெல்லாம் அதிகாரப்பூர்வமான சுற்றுப்பயணங்களை நான் மேற்கொள்கிறேனோ, அப்போதெல்லாம் முன்னாள் படையினர் சங்கங்களை சந்தித்து, அவர்களோடு உரையாடி, அவர்களின் மனக்குறைகளைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன். அண்மையில் கூட, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற "**எண்ணித் துணிக - முன்னாள்ராணுவ வீரர்கள், முன்னாள்போர் வீரர்கள், வீர மங்கைகள், துணிச்சலுக்கான விருதுகளை வென்ற இராணுவத்தினருடன் கலந்துரையாடல்** என்ற நிகழ்ச்சி சென்னை ஆளுநர் மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். மாநில ஒருங்கிணைக்கப்பட்ட நிதியின் மேலாண் குழுவின் வருடாந்தரக்கூட்டம், என்னுடைய தலைமையின்கீழ் தொடர்ந்து நடைபெற்று வருகிறது; நானும் இந்தக் கருணை நிதியிலிருந்து,

நமது முன்னாள் இராணுவத்தினர் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்கு பல்வேறு ஆதாயங்கள் குறித்த காலத்தில் சென்று சேர்வதை உறுதி செய்து வருகிறேன்.

முப்படையினர் கொடி நாள் நிதியளிப்பில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி வகித்து வருகிறது. மாநில அரசும் கூட, முன்னாள் படையினருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் சலுகைகள், விலக்குகள், இட ஒதுக்கீடுகள் ஆகியவற்றை கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் அளித்து வருகிறது. நாம் முப்படையினர் கொடிநாளைக் கடைப்பிடிக்கும் வேளையிலே, நமது பாதுகாப்புப் படையினர், மூத்த முன்னாள் இராணுவத்தார் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு ஆதரவாக இருப்பதில் நமது அர்ப்பணிப்பை நாம் மீள் உறுதி செய்வோம்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், முப்படையினர் கொடிநாளுக்குத் தாராளமாக நிதியளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் படையினரின் பால் நமது நன்றியறிதலை சொற்களில் மட்டுமல்ல, செயல்களிலும் கூட நமது ஆழமான மரியாதையையும், பாராட்டுதல்களையும் பிரதிபலிக்கச் செய்வோம்.

---

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு :-**
**நாள்: 07.12.2024** **மக்கள் தொடர்பு அலுவலகம்**